ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றுநிருப இலக்கம் : PS/PCMD/C/18/2019

எனது இலக்கம்: PS/PCMD/ED/04
2019 ஜூன் மாதம் 17 ஆம் திகதி

அனைத்து அமைச்சு செயலாளர்கள்,
அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து பிரதம செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு,

நாட்டிற்கு இறையாசி வேண்டி மேற்கொள்ளப்படுகின்ற புண்ணியகரும நிகழ்வு - 2019 ஜூன் மாதம் 22 ஆம் திகதி

அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக விபத்துக்குள்ளான மக்களுக்கு இறையாசி வேண்டுதல் மற்றும் மீண்டும் அவ்வாறான விபத்தொன்று இலங்கைத் தாய்க்கு நிகழக்கூடாது என்ற பிரார்த்தனையுடன் நாட்டிற்கும் மக்களுக்கும் இறையாசிவேண்டும் புண்ணியகரும நிகழ்வொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அதன் மூலம், விபத்துக்குள்ளான மக்களினதும் மற்றும் ஏனைய நாட்டு மக்களினதும் நிச்சயமற்ற மற்றும் அமைதியற்றதன்மையைப் போக்கி மன அமைதி ஏற்பட்டு நாட்டினுள் சமாதானம்,ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வைக் கட்டியெழுப்பும் சூழலை ஏற்படுத்திக்கொள்ள பங்களிப்புக் கிடைக்கும்.

தாக்குதல் காரணமாக உயிரிழந்த நபர்களை நினைவுகூர்தல் மற்றும் காயமடைந்தவர்களுக்கு விரைவான சுகத்தை பிரார்த்தனை செய்யும் நோக்கில் இந்த புண்ணியகருமத்தில் ஈடுபடல்வேண்டும். இங்கு பின்வருமாறு செயற்படுவது பொருத்தமானது.

1.இதற்காக நாட்டு மக்கள் அனைவரதும் பங்களிப்புடன் **புண்ணியகரும நிகழ்வொன்றை 2019 ஜூன் மாதம் 22 ஆம் திகதி மாலை 06.00 மணிக்கு நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.**

2.அங்கு அனைத்து வீடுகள்/அலுவலக வளாகங்களின் முன்னால் விளக்கொன்றையேற்றி 10 நிமிடங்கள் தத்தமது மத நம்பிக்கைக்கேற்ப மத வழிபாடு செய்து "**மீண்டும் இலங்கைத் தாய்க்கு எதுவிதமான பயங்கரவாத அச்சுறுத்தலும் நிகழாது எங்கள் அனைவருக்கும் சமாதானம், மகிழ்ச்சி, சகவாழ்வு மற்றும் சௌபாக்கியம் ஏற்படவேண்டும்**" என புண்ணியகருமத்தில் ஈடுபடவேண்டும். இது தொடர்பில் அனைவரையும் தெளிவூட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரதியொன்றையும் இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

3.இப்புண்ணியகரும நிகழ்வை நாடளாவிய ரீதியில் அனைத்து மக்களும் தமது வீட்டுமட்டத்தில் செய்யும் பொருட்டு தகுந்த செயற்திட்டமொன்றை / தெளிவூட்டலை மாவட்ட செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ගාලු මුවදොර, කොළඹ 01 / காலி முகத்திடல், கொழும்பு 01 / Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk

4.இந்த நாடளாவிய ரீதியிலான புண்ணியகரும நிகழ்வை பௌத்த, இந்து, கத்தோலிக்க/ கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் மத வழிபாட்டுத்தளங்களில் நடத்த பொருத்தமான செயற்திட்டமொன்றை மேற்கொள்வதற்கு குறித்த சமய தலைவர்கள் / மதகுருமார்களிடம் மரியாதையுடன் எதிர்பார்கின்றேன். அதற்காக, புத்தசாசன,வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு, அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு என்பவற்றினால் குறித்த ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. மேலும், நாட்டிற்கு இறையாசிவேண்டி மேற்கொள்ளப்படுகின்ற புண்ணியகரும நிகழ்வு தொடர்பில் நாடளாவிய ரீதியில் பொதுமக்களை தெளிவூட்டி ஒத்துழைப்பை பெறவேண்டியுள்ளதால் இலத்திரனியல், அச்சு உட்பட அனைத்து ஊடகங்கள் மூலம் அதற்கான ஆரம்ப விரிவான பிரச்சாரத்தை வழங்குவதற்கு வெகுசன ஊடக அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை மக்களின் பயத்தையும் சந்தேகத்தையும் நீக்கி அவர்களுக்காக பாதுகாப்பான தேசத்தை உருவாக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் இந்த புண்ணிய நிகழ்வை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு தங்களால் கிடைக்கும் ஒத்துழைப்பை மிகவும் பாராட்டுகிறேன்.

உதய ஆர்.செனெவிரத்ன
ஜனாதிபதி செயலாளர்

பிரதிகள்:-

1.அனைத்து ஆளுநர்கள் - தமது மாகாணங்களில் இப்புண்ணியகரும நிகழ்வை நேரடியாக குறித்த தினத்தில் மேற்கொள்ள தேவையான தலைமைத்துவத்தை வழங்குவதற்காக

2.செயலாளர் - புத்தசாசன,வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு - தே.ந

3.செயலாளர் - தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு - தே.ந

4.செயலாளர் - அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு - தே.ந

5.செயலாளர் - சுற்றுலா அபிவிருத்தி வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு - தே.ந

6.செயலாளர் - உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தே.ந

7.செயலாளர் - வெகுசன ஊடக அமைச்சு - தே.ந

8.தகவல் பணிப்பாளர் நாயகம் - ஊடகங்களை பயன்படுத்தி பொதுமக்களை தெளிவூட்ட பிரச்சார செயற்திட்டமொன்றை தயாரிப்பதற்கு.